எதிரொலி

சிவம்

ஆற்றுப் படுகையைத் தாண்டிய மேட்டுச் சந்தையின் மூலையிலே முதல் கடை அவனுடைய பூக்கடைதான்.

அளவிலும் வண்ணத்திலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கிடக்கும் அந்த மலர்கள் தேர்ந்த கவிஞனின் அழகிய கனவுக் காட்சியாகும். வானில் இறைந்த மீன்களை வரிசைப்படுத்தியதைப் போன்ற அந்தத் தோற்றத்திற்காகவே அவன் கடையைச் சுற்றிலும் கூட்டம் குவியும்.

"வாங்கோ! வாங்கோ! வண்ணப்பூ வாங்க வாங்கோ! வாசப்பூ வாங்கிப் போங்கோ! சாமிக்கு வெள்ளைப் பூ - பெஞ்சாதிக்கு முல்லைப் பூ! பிள்ளைக்கு ரோஜா பெத்த தாயிக்கு பூ வேணுமா? வாங்கோ! வாங்கோ! வண்ணப்பூ வாங்க வாங்கோ!"

மௌன ஓவியத்திற்கு ஓர் இசை விளக்கம்போல அந்தப் பூக்கடைக்கு அவன் பாடும் விளம்பரப் பாட்டு பலநூறு நபரின் பார்வையைத் திருப்பி வைக்கும். யாராவது வரும்போது விளம்பரப் பாட்டையே இசை மாற்றி வரவேற்புப் பாட்டாகப் பாடுவான்.

ஆனால் குரல் அடங்கிப் பாட்டு நின்று மௌன வரவேற்புச் சிலையாக அவனை நிறுத்திவைக்கும் வாடிக்கைக்காரியும் ஒருத்தி தினம் தினம் வருவாள்.

அதோ! வான நீலத்தையே வாரியெடுத்துச் சுற்றிக் கொண்டவள்போல நீலம் செழிக்க அவள் வருகிறாள். கையொரு பூவாய், காலொரு பூவாய், நடையொரு பூவாய் அவளே ஒரு நதி நடக்கும் நடையிலே வரு கிறாள்.

ஆற்றுப்பாலத் திருப்பத்திலே அவள் வரும்போதே பூக்கடைக்காரனின் பாட்டு நின்று விடுகிறது. உணர்ச்சி பாவமற்ற முகமும் அலையாடாத கண்களுமாய் ஆற்றில் மிதக்கும் படகுபோல வரும் அவள் அவன் கடைக்கு முன் நிற்கிறாள்.

பரபரக்கும் அவன் கைகள் மலரை இலையில் சுற்றிக் கொண்டிருந்தாலும், அவனுடைய விழிவண்டு அவளு டைய கைமலரிலே பதிந்து கிடக்கும்.

மலர்ச்சுருள் அவளுடைய கைகளுக்கு மாறுகிறது. கைமலரைத் தாண்டி அவன் கண்விழிகள் நகரவேண்டும் என்ற அவனுடைய நெடுநாளைய தவிப்பு ஒரு நாளும் நடப்பதில்லை.

கடைக்கு அருகிலே வரும்போது அவள் கண்களை அவன் கண்கள் சந்திக்கும். கடைக்கு வந்த பின்னர் அவள் கரமே அவன் கண்காணும் காட்சி. கடையை விட்டுப் புறப்பட்ட பின்னால் நடனத்தில் முதல் பாடமே போல அசையும் அவள் கால்களில் பதிந்துவிடும். இதற்குமேல் எந்த நாளுமே அந்த நாடகத்தின் காட்சிகள் வளர்ந்தது இல்லை.

மலரை வாங்கிக் கொண்டு இதோ அவள் புறப்பட்டு விட்டாள்.

குளிர்நீரில் செயலற்றுக் கிடக்கும் உடல் நீரினின்று வெளிப்படுவதைப்போல, கடையினின்று அவள் நீங்கும்

கணமே அவன் வாய் ''வாங்கோ! வாங்கோ!'' பாட்டை இயந்திர கதியிலே இசைக்கத் துவங்கும். அவன் விழிகள் மட்டும் அந்த நதி நடந்த நடையிலே ஒன்றிப்போகும்.

எத்தனை நாள் இந்த நாடகம்? அவனுக்குச் சலிப்பு வந்தது.

நிலவு தழுவிய அந்த மணல்மேட்டில் அவன் பாயை விரித்துப் படுத்தான்.

சூன்யத்தில் நிலைத்துவிட்ட பார்வையோடு படுத்துக் கிடந்த அவன் மனத்திரையில் பள்ளிப் பிள்ளைகளின் வாய்ப்பாடு பாடம் போல ஒரே காட்சி தோன்றித் தோன்றி மறைந்தது.

பாலத் திருப்பத்தில் நீலம்... பனிநிலத்துப் பூவைப் போலக் குளிர்ச்சியைத் தவிர எந்தப் பாவமும் அற்ற இரு விழிகள்... மலரை வாங்க நீளுமொரு கைமலர்... மலரினும் மெல்லிய இரு பாதங்கள்... நதி நடந்த நடை...

நெஞ்சில் கேள்வியும் பதிலுமாய் நினைவலைகள் ஆரவாரித்தன.

'அவள் என்னை நினைக்கிறாள். அதனால்தான் என்னிடமே வருகிறாள்!'

'பக்கத்துக் கடைப்பூவைக் காட்டிலும் என் கடை வாடி நிற்கும் நாட்களிலும் வருகிறாளே! இது பொய் யில்லை. அவளும் அவள் வருகையும் பொய்யில்லை. பூவிலே புனிதமிருப்பது பொய்யா? அவள் என்னை நினைக்கிறாள் என்பது பொய்யா?''

ஆனால் மாறுதலற்ற நடையிலும் பாவமற்ற முகத் திலும், அலைகளற்ற விழியிலும் ஒரு வெறுமை முடியவில்லை.

'இவ்வளவு நாட்களில் ஒரு வார்த்தை பேசியதுண்டா? இந்தப் பூ வேண்டும் என்றும் அவள் சொல்வதுகூட இல்லையே! அவ்வளவுக்குக்கூட நான் எங்கே காத்திருந்தேன். என்னமோ மற்றெவரைக் காட்டிலும் அவளைத் தான் அவசரமாக அனுப்பிவிடத் துடிப்பதைப்போல அவளைப் பார்த்தவுடனே முல்லையை அள்ளி இலையில் சுற்றி விடுவேனே!'

'ஒரு நாளேனும் அவள் காசு குறைவாகவோ அதிகமாகவோ கொடுத்தாலும் வியாபாரியாகவாவது பேசலாமே! மிகச் சரியாக அல்லவா ஒவ்வொரு நாளும் கொண்டு வருவாள்!... அது சரி...

மலைப் பாதையின் திருப்பம்போல அவன் சிந்தனை எண்ணங்கள் மின்னலாய் வெட்டி வேறு வழியில் இயங்கியது.

'அது சரி... உனக்கு அவளைப் பற்றிய 'நினைப்பு' உண்டு என்பதுபோல் நீ எப்போதாவது நடந்து கொண்டது உண்டா? ஒலியே இல்லை என்றால் எதிரொலி உண்டா? என்றாவது அவளுக்காக நீ புன்னகைத்தது உண்டா? என்ன வேண்டும் என்று கேட்டதுண்டா?'

அப்படி ஒரு நாளும் நிகழ்ந்ததாக அவனுக்கு நினைவில்லை. அவன்தான் அவளைக் கண்டதுமே பரபரத்துப் போய் வியர்வைக் குளத்தில் நீராடுவானே! அவள் வரவு அவனை மிகமிக மகிழ்விப்பதிலேயே உணர்ச்சிப் பிழம்பாகிச் செயலற்றுப் போகிறான். மிக வேகமாகச் சுற்றும் பொருள் கண்ணுக்குத் தெரிவது இல்லையே!

அவள் ஒலியானால் அவன் எதிரொலி ஆகத் தயங்கமாட்டான். இருவரும் எதிரொலியாக முடியாது, யாராவது ஒருவர் ஒலியானால் அன்றி...

மீண்டும் அதே நினைவுகள்... ஒழுங்குபடாத சிந்தனைச் சிக்கலில், அவன் பாயில் புரண்டான்.

மறுநாள்...

என்றும் மலரும் தாமரையைப்போல் அவள் வருகிறாள்.

அவனுக்குப் புன்னகைக்க வேண்டும் என்ற நினைப்பு! ஆனால் நினைப்பு நடப்பானதாய்த் தெரியவில்லை.

அவனுக்குள்ளே பரபரத்துச் செயலற்றுப் போகும் இதயம், வேகமாகச் சுற்றும் மின்விசிறியின் இறக்கைகளே இல்லாது தோன்றுமொரு தோற்றம்போல வெறுமையுற்று நின்றது.

அவள் கடைக்கு முன்னால் நிற்கிறாள். ஒரு கணம் வழக்கமான வகையில் அவன் கைகள் முல்லையை நெருங்கி விட்டன. மறுகணம் கரத்தைச் சட்டென இழுத்துக் கொண்டான். அவன் பேசினான்.

“உனக்கு எந்தப் பூ வேண்டும்?” இது அவன் கேட்க நினைத்தது. ஆனால் அந்த ‘உனக்கு’ மட்டும் வாயைத் தாண்டி வந்ததாகத் தெரியவில்லை. கேள்வி முடியும் போது தலையை நிமிர்ந்தான். அவளும் அதே நேரத்தில் தலை நிமிர்ந்திருக்க வேண்டும். அப்போது அவள் விழியில் வியப்பின் அலை படர்ந்ததா இல்லையா என்று அவன் அன்று முழுவதும் நெடுநேரம் சிந்தித்தான். எந்த முடிவுக்கும் வர முடியாமல் தவித்தான்.

“எந்தப் பூ வேண்டும்?” என்று அவன் யாரையோ கேட்பதுபோல் கேட்டபோது, அவளது கைவிரல் காந்தள் அங்கிருந்த முல்லையைக் காட்டியது. இப்போதும் அவள் பேசவில்லை. மௌனம் கலையாத வீணையின் ஓவியமாகவே அவள் நின்றுவிட்டாள். அதற்குமேல் பேச அவனால் முடியும் என்று அவனுக்கே நம்பிக்கை இல்லை.

அவன் முல்லையை இலையில் சுற்றி அந்தத் ‘தாமரையை’ அனுப்பி வைத்தான்.

‘ஒரு வார்த்தையிலாவது அவள் பதில் சொல்லியிருக் கலாம்.’

இந்த நினைப்பில் அவன் அன்று முழுவதும் களைத்துக் கிடந்தான். அதன் பின்னர் ஒரு வாரம் வரை அவளிடம் எதையும் பேச எண்ணமில்லை. இப்போது ஒலியிருந்தும் எதிரொலிக்கவில்லையே?

இன்னொரு முறை... அவள் வந்து நின்றாள்.

“நீ இன்னும் இருபது காசு தரவேண்டும்.”

அநியாய விலை! ஆனால் அவள் பேச்சில்லாமல் கொடுத்தாள். இப்போதாவது அவள் பேசியிருக்கக் கூடாதா? அவன் நம்பிக்கை இழந்துவிட்டான்.

இப்போதெல்லாம் அவன் அடிக்கடி மனதுக்குள் ளேயே அழுவான். அந்தப் பூக்களின் உள்ளே அவளது கண்ணும் கையும் தெரிவதை அவன் கண்களில் நீர்த்திரை படர நெடு நேரம் பார்த்துக்கிடப்பான்.

அன்று இரவு... அவன் நெடுநேரம் தூக்கமின்றிக் கிடந்தான்.

அவன் அந்த முடிவுக்கு வந்து விட்டான். அவன் யாரோ என்று அவளிருந்தால், அவள் யாரோ என்ற முடிவுக்கு அவன் வரவேண்டியதுதானே?

வாழ்வின் மையப் புள்ளியை ஒரு பொய்யிலே வைத்து விட்டானா? அவன் வாழ்வு வட்டம் முனைகள் சந்தித்து வட்டமாகாமலே வெறும் வளைவுச் சிக்கலாகவே

ஆகிவிடுமோ? ஆயினும் அவன் நெஞ்சில் அடிக்கடி அந்த நினைப்புமட்டும் வந்தபடிதான் இருந்தது.

“பூவிலே புனிதமிருப்பது பொய்யா? அவள் நெஞ்சில் என் நினைப்பு உண்டு என்பது பொய்யா?”

“பூக்கள் பொய்யாவதில்லை.” அவன் முணு முணுத்தான்.

கண்ணிரண்டில் நீர் வழிய முகம் நனைந்த அவன் இப்போது வாய் நிறையச் சத்தம் போட்டான்.

“பூக்கள் பொய்யாவதில்லை.”

அந்தப் பொட்டல் வெளி அவன் சத்தத்தை ஒரு முறை கூட எதிரொலிக்கவில்லை. ஏன்? அவனொலியே முடிந்த மறுகணம் ஒரு பொய்யொலியாகி விட்டது போன்றதொரு அமைதி!

எதிரொலி தாகம் அவனைப் பித்தனாக்கியது. அவன் மீண்டும் சத்தம் போட்டான். காற்றிலே கலந்த ஒலி சுவடும் அற்றுச் சென்று மறைந்தது.

சோர்ந்து படுத்த அவனுக்குச் சென்ற திருவிழாச் சந்தையிலே ஒரு தாடிச் சாமியார் சொன்ன கதை நினைவுக்கு வந்தது.

அந்தச் சாமியார் கடல்கடந்து மனித வாடையற்ற அனாதைத் தீவிலே தவமிருந்தாராம்... அங்கே இருக்கும் எதிரொலி மலைத்தொடர் மெல்லிய சிரிப்பொலியானா லும் பதினாறு முறை எதிரொலிக்குமாம்.

உடனே அந்த மலைத் தொடருக்குச் சென்று சத்தம் போட்டு அழுது அந்த எதிரொலியைக் கேட்டுச் சிரிக்க

வேண்டும் என்பதுபோல் ஒரு வெறி...

அவன் துணிந்துவிட்டான். நாளை மாலை அவன் கடையை இழுத்துச் சார்த்தி விடுவான்.

இன்று மட்டுமே அவன் பூக்கடைக்காரன். நாளை அந்தக் கடையில் மலர்கள் சிரிக்கப் போவதில்லை.

அவன் அப்போது அழுது கொண்டிருந்தான்.

அதோ பாலத்தின் மூலையிலே நீலம் மின்னுகிறது, மேட்டுச்சரிவிலே நதி நடக்கிறது.

நேற்றும் முன் நாளும் அவன் கண்களைத் துடைத்த படி முகத்தாலும் மௌனமாகி அவளுக்கு முல்லை தருவான். இன்று அவனுக்குக் கண்ணீரைத் துடைக்கும் எண்ணமில்லை.

'நான் யாரையும் பார்க்க வேண்டியதில்லை. என் ஆசை. என் விருப்பம். நான் அழுவேன்.'

அவன் குழந்தைத்தனமாக எண்ணினான்.

அவள் கடைக்கு வந்துவிட்டாள்.

முல்லையைச் சுற்றக் கைகளில் எடுத்த இலையில் அவனுடைய கண்ணீர் விழுந்து தெறித்தது.

அவளுக்கும் அவனுக்கும் இடையிலே இருந்த முல்லைச் சரத்தை நோக்கி நீண்ட அவளுடைய கையிலே யும் கண்ணீர் விழுந்தது.

அவன் நிமிர்ந்து பார்த்தான். அழுத விழிகள் அகன்று வியந்தன. சந்தேகமில்லை. சந்தேகமே இல்லை.

அவள் தலை நிமிர்ந்திருந்தது. இதழ்கள் துடிக்க அவனது கண்களிலேயே பதிந்திருந்த அவளது கருநீல

விழிகளிலே கண்ணீர் முல்லை மலர்ந்து மலர்ந்து வெடித்துக் கொண்டிருந்தது.

இப்போது அவள் குமுறியே அழுதாள்.

நான்கு கண்களிலே இருந்து வழிந்த நீர்த்துளிகள் அங்கே இருந்த ரோஜாவின் ஆறேழு மெல்லிய இதழ்களிலே விழுந்து ஏழெட்டு முறை எதிரொலித்தன.

(மே 1967)